செ.வெ.எண்: 946

நாள்: 25/10/10

மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை

# செய்தி வெளியீடு – 25.10.2010

சிறப்பான பொது சுகாதாரச் சேவையை மக்களுக்கு வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு முன் உதாரணமாக விளங்குகிறது என்றும், கிராமப் பகுதிகளில் மாவட்ட மற்றும் வட்ட அளவிலான மருத்துவ மணைகள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் துணை சுகாதார நிலையங்களை ஒருங்கினைத்து சுகாதாரச் சேவையை சிறப்பாக விரிவுபடுத்தியுள்ளது என்றும் உலக வங்கி பாராட்டி உள்ளது. உலக வங்கிக் குழு , தமிழ்நாடு சுகாதாரத் திட்டம் செயல்படுத்தும் பல திட்டங்களில் அரசு மருத்துவமனைகளில் 24 மணி நேரமும் செயல்படும் அவசரகால பேறுகால சிகிச்சை மற்றும் சிசு நல மையங்கள், இதய நோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்று நோய் தடுப்பு முன்னோடி திட்டங்கள், மற்றும் அரசு மருத்துவமனை செயல்பாடுகளை முற்றிலும் கணினிமயமாக்கி இணையதள வழியே நிர்வகித்தல் ஆகிய திட்டங்களை ஆய்வு செய்து, இத்திட்டங்கள் மிகவும் சிறப்பாக செயல்படுத்தப்படுகின்றன என்றும், மற்ற மாநிலங்களுக்கு வழிகாட்டும் விதமாக இந்த திட்டங்களின் செயல்பாடுகள் உள்ளது என்றும் பெரிதும் பாராட்டியுள்ளது.

இதய நோய் மற்றும் கர்ப்பப்பை வாய் புற்று நோய் தடுப்பு திட்டம் ஆகிய இரண்டு திட்டங்களும் மாநிலம் முழுவதும் அமுல்படுத்த ரூ.193 கோடி நிதியை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது. இந்த திட்டங்களை கடந்த 14.10.2010 அன்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தொடங்கி வைத்தார்கள்.

உலக வங்கி தனது “World Bank” செப்டம்பர் 2010 இதழில் தலைப்பு செய்தியாக “Tamil Nadu shows the way in tackling some of India’s most pertinent health issues” என்ற தலைப்பில் தமிழ்நாட்டைப் பராரட்டி கட்டுரை வெயியிட்டுள்ளது. இந்த கட்டுரை இணைக்கப்பட்டுள்ளது.

வெளியீடு, இயக்குநர்
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

வி.கு.சுப்புராஜ்
அரசு முதன்மைச் செயலாளர்